Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 17 [ 01-08-1993 ] ஞாயிற்றுக்கிழமை ஓசை 164

1-8-1993

## சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி யுத்தம் நடத்த சிறிமாவோ கோரிக்கை

அரசாங்கம் தனது சகல நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொண்டு உடனடியாக நாடு முழுவதிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவி சி றி ம ா வே ா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். மேலும் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கருத்துத் தெரிவிக்கையில் மண்கிண்டி மலையில் ஒரே தாக்குதலில் 52 இராணுவத்தினர் பலியாக அரசாங்கத்தின் விவேகம் இன்மையே காரணம். எனவே இந்த நிலையை நாம் தொடரவிடக் கூடாது. ஆகவே நாட்டின் நலன்கருதி அரசாங்கம் நாடு முழு வதும் தனது ஏனைய சகல நடவடிக்கையையும் நிறுத்திக்கொண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாடு முழுவதிலும் உள்ள மக்களையும் ஏனைய சகல வளங்களையும்பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

## உண்ணாவிரதி ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தம்மை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா அரசைக் கோரி சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ள 33 யுத்தக் கைதிகளில் ஒருவர் நேற்று மயக்கமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

திரு. குமார என்ற பொலிசாரே இவ்வாறு மயக்கம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை யுத்தக் கைதிகளின் இவ் உண்ணாவிரதம் மூன்றாவது நாளாக நேற்று தொடர்ந்தது.

## கற்பூரம் எடுத்து வந்தவர் தாண்டிக்குளத்தில் தடுப்பு

[வவுனியா]

அங்கர்மா பையினுள் விளையுக் கற்பூரத்தை மறைத்து எடுத்து வந்ததாக கூறப்படும் ஒருவர் தாண்டிக்குளத்தில் சிறிலங்கா படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பாலமோட்டை, ஓமந்தையைச் சேர்ந்த பஞ்சலிங்கம் என்பவரே இவ்வாறு இராணுவத்தினரால் நேற்று தடுத்து வைக்கப்பட்டவராவார்.

# ஆ. க. வெ. சமர் மாவீரர்களுக்கு பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டு உணர்வுபூர்வ அஞ்சலி!

## மலர் தூவி வணங்கினர்

ஆனையிறவில் 1991ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆ. க. வெ. வரலாற்றுச் சமரில் வீரச்சாவெய்திய மாவீரர்களின் நினைவாலயம் நேற்றுமாலை கொடிகாமத்தில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான மக்கள், அம் மாவீரர்களுக்கு மலர் தூவி உணர்ச்சிபூர்வமான தமது அஞ்சலியைச் செலுத்தினர்.


ஆ. க. வெ. வரலாற்றுச் சமரில் வீரச்சாவெய்திய 602 போராளிகளின் நினைவாக நிறுவப்பட்ட நினைவாலயத் திறப்புவிழாவில், பல்லாயிரக் கணக்கான மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டனர். இவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்திருந்தனர்.

மேலும், ஆ. க. வெ. நடவடிக்கைகளில் வீரச்சாவெய்திய போராளிகளின் பெற்றோர்களும் அழைத்து வரப்பட்டிருந்தனர். இவர்கள் தமது பிள்ளைகளின் உருவப் படங்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். இந் நிகழ்ச்சி உள்ளத்தை உருக்குவதாய் இருந்தது.

இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மக்கள், அங்கு அமைக்கப்பட்டிருந்த 602 மாவீரர்களினதும், படங்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். இவ் இதயபூர்வ அஞ்சலியைச் செலுத்துவதற்காக மக்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருக்கவேண்டி ஏற்பட்டபோதும், மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தத்தவறவில்லை.

இதேவேளை, நினைவாலயப் பகுதி நாலாபுறமும் நன்கு அலங்கரிக்கப்பட்டு சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. (86)

## மாவீரர் நினைவாலய திறப்பு நிகழ்வுகள்



...லைப் புலிகளின் துணைத்தளபதி திரு. பால்ராஜ் தேசியக் கொடியை ஏற்றிவைக்கிறார்

## சிறப்புற நடைபெற்ற மாவீரர் நினைவாலய திறப்பு

(தென்மராட்சி)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. சமரில் வீரச்சாவடைந்த 602 மாவீரர்களின் நினைவாக கொடிகாமம் கண்டி வீதியில் அமைக்கப்பட்ட நினைவாலய திறப்பு விழா நேற்று பிற்பகல் 5.00 ...

ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார் தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் துணைத் தளபதி திரு. பால்ராஜ் ஏற்றி வைத்தார். மாவீரர் நினைவுக் கல்லை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி திரு சொர்ணம் திரை நீக்கம் செய்துவைத்தார்.

... ஜெனா ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், முல்லை மணலாறு மாவட்ட சிறப்புதளபதி திரு. அன்பு, தமிழீழ துணை ...

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான மக்கள், அம் மாவீரர்களுக்கு மலர் தூவி உணர்ச்சிபூர்வமான தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

ஆ. க. வெ. வரலாற்றுச் சமரில் வீரச்சாவெய்திய 602 போராளிகளின் நினைவாக நிறுவப்பட்ட நினைவாலயத் திறப்புவிழாவில், பல்லாயிரக் கணக்கான மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர். இவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்திருந்தனர்.

மேலும், ஆ. க. வெ. நடவடிக்கைகளில் வீரச்சாவெய்திய போராளிகளின் பெற்றோர்களும் அழைத்து வரப்பட்டிருந்தனர். இவர்கள் தமது பிள்ளைகளின் உருவப் படங்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். இந் நிகழ்ச்சி உள்ளத்தை உருக்குவதாய் இருந்தது.

இந் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மக்கள், அங்கு அமைக்கப்பட்டிருந்த 602 மாவீரர்களினதும், படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இவ் இதயபூர்வ அஞ்சலியைச் செலுத்துவதற்காக மக்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருக்கவேண்டி ஏற்பட்டபோதும், மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தத்தவறவில்லை.


இதேவேளை, நினைவாலயப் பகுதி நாலாபுறமும் நன்கு அலங்காரிக்கப்பட்டு சிவப்பு, மஞ்சல் நிறக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. (86)



...லைப் புலிகளின் துணைத்தளபதி திரு. பால்ராஜ் தேசியக் கொடியை ஏற்றிவைக்கிறார்



விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பொட்டம்மான் நினைவாலயத்தை திறந்து வைக்கிறார்



விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி திரு. சொர்ணம் மாவீரர் நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்து வைக்கிறார்

## கௌரவிப்பு

(தென்மராட்சி)

ஆ. க. வெ. சமரில் வீரச்சாவெய்திய போராளிகளின் நினைவாலயத்தை அமைத்த திரு. ரவிக்கு யாழ். மாவட்டத் தளபதி அன்பு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

## மிகுதி வினாத்தாள்கள் 9ஆம் திகதி வரும்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குரிய மிகுதி வினாத்தாள்கள் எதிர்வரும் 9ஆம் திகதி விமானம் மூலம் எடுத்துவரப்படவுள்ளதாக கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பத்து நாட்களுக்குரிய முதற்கட்ட வினாத்தாள்கள் கடந்த வியாழக்கிழமை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

## நாளை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்கள் நாளை திங்கட்கிழமை விநியோகம் செய்யப்படும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்தஇரண்டு மாதங்களுக்குரிய வெளிநாட்டு, உள்நாட்டுத் தபால்கள் 1283 பொதிகள் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த தடவை கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்படாமல் இருந்த சுமார் 800 தபால் பொதிகளும் தற்போது கொண்டுவரப்பட்ட தபால் பொதிகளில்அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# சிறப்புற நடைபெற்ற மாவீரர் நினைவாலய திறப்பு

(தென்மராட்சி)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. சமரில் வீரச்சாவடைந்த 602 மாவீரர்களின் நினைவாக கொடிகாமம் கண்டி வீதியில் அமைக்கப்பட்ட நினைவாலய திறப்பு விழா நேற்று பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்நிகழ்விற்கு தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா தலைமைதாங்கினார். இந்நிகழ்வில் தென்மராட்சி கோட்ட சிறப்புப்பொறுப்பாளர் திரு. குணா ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார் தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் துணைத் தளபதி திரு. பால்ராஜ் ஏற்றி வைத்தார். மாவீரர் நினைவுக் கல்லை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி திரு சொர்ணம் திரை நீக்கம் செய்துவைத்தார்.

மாவீரர் நினைவாலயத்தினை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பொட்டம்மான் திறந்து வைத்தார் நினைவாலய உருவப்படங்களுக்கு மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனா ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன். முல்லை. மணலாறு மாவட்ட சிறப்புதளபதி திரு. அன்பு, தமிழீழ துணை அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன், வன்னி மாவட்ட சிறப்பு தளபதி திரு. தீபன், தமிழீழ கடற்புலிகளின் தளபதி திரு சூசை, விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி திரு.

[ 3 ஆம் பக்கம் பார்க்க ]

# தமிழரின் சுதந்திர வேட்கையை உலகுக்கு வெளிக்காட்டிய சமர்

## புலிகளின் மூத்த உறுப்பினர் பொட்டம்மான்

ஆனையிறவுச் சமர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எமது இராணுவ ரீதியான கட்டமைப்பின் புதிய பரிமாணத்தினை உலகிற்கு அறிமுகப்படுத்திய ஒரு சமர் அந்த ஆனையிறவுச் சமரின் நினைவுகள் எமது நெஞ்சிலே - தமிழீழ மக்களின் நெஞ்சங்களிலே என்றும் பசுமையான நினைவுகளை விட்டுச் சென்றிருக்கும். எமது இனம்-தமிழீழ மக்கள் சுதந்திரமாக ஒரு தனியுரிமை பெற்ற சுதந்திர நாட்டின் இனமாக-வாழ உரித்துடையவர்கள் என்பதை எமது இராணுவ பலத்தினூடாக நாம் எமது எதிரிக்கும் உலக மக்களுக்கும்- இராணுவ ரீதியான செய்தியாக வழங்கிய யுத்தம், இந்த ஆனையிறவு யுத்தம்.

இவ்வாறு ஆ. க. வெ. சமரில் வீரச்சாவடைந்த மாவீரரின் நினைவாக நேற்று கொடிகாமத்தில் இடம் பெற்ற நினைவாலய திறப்பு விழாவிலும் அஞ்சலிக் கூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பொட்டம்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; இந்த ஆனையிறவு யுத்தத்தின்போது நாம்பலபாடங்களைக்கற்றுக்கொண்டோம். எமது போராளிகள் சாதாரண மனித கற்பனைக்கு அப்பாற்பட்ட வீரத்துடனும், உறுதியுடனும் போராடினார்கள். போர்க்களத்தில்காயமடைந்து அந்தக் காயம் ஆறமுதல் மருத்துவ மனையிலிருந்து மீண்டும் போர்களத்திற்கு வந்துபோர்க்களத்திலேபோராடியவர்களையும், மீண்டும் போர்க்களம் வந்து போராடி வீரச்சாவடைந்த போராளிகளின் நினைவு

[ 3 ஆம் பக்கம் பார்க்க ]

# கடற்போரில் இன்று நாம் கெரில்லா அணியாகவே உள்ளோம்

## கடற்புலிகள் சிறப்பு தளபதி சூசை

யாழ். குடாநாடுஇன்றுசகல மாவட்டங்களுடனுமான தொடர்புகளிலிருந்து நீங்கி நெருக்கப்பட்ட நிலையில் ஒரே ஒரு போக்குவரத்துப் பாதையாக இருப்பது கிளாலிப் போக்குவரத்து மட்டுமே. இவ்வாறு நேற்று நடைபெற்ற நினைவாலய திறப்பு விழாவில் உரையாற்றிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இரண்டு தினங்களுக்கு முன் சிறிலங்கா கடற்படையால் பத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அன்றையதினம் கடற்புலிகளின் பாதுகாப்பு நாள். கடற்புலிகளின் பாதுகாப்பான நாளில் இப்படியான நிகழ்வு நிகழ்ந்ததால் நேற்றையதினம் பாதுகாப்பு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எமது போராளிகளை நீங்கள் அதிகாலை ஆறுமணிவரைக்கும் பாதுகாப்பை போட இயலாதா? என்று பொதுமகன் ஒருவர் கேட்டிருந்தார் அந்த கேள்விக்கு இங்கு பதிலளிப்பதன் மூலம் முழுமையான பிரச்சினைக்கும் விளக்கமளிக்க முடியும் என நினைக்கிறேன்.

பூநகரி நாகதேவன்துறை கடற்படையினரின் கடற்படை முகாம். அங்கே கப்பல்களையும் யுத்தப்படகுகளையும் கட்டியிருப்பதற்கு ஏதுவாக துறைமுகம் அமைக்கப்பட்டுள்

[ 3 ஆம் பக்கம் பார்க்க ]

## வரி விளம்பரம்

### BRIGHT LECTURES

பன்னிரண்டு அம்ச திட்டம். மருந்தில்லாமல் தமிழீழத்தில் நூறு ஆண்டுகாலம் ஆடி பாடி வாழ்வது எப்படி? விரிவுரையாளர் கதிர்காமத்தம்பி ஜெகநாதன் இல. 11 குறசட் ஒழுங்கை, யாழ்ப்பாணம். உயர் சுகாதார வைத்திய அதிகாரி வீட்டில் வசிப்பவர். (5591)

### விற்பனைக்கு

ஆங்கில தட்டச்சு இயந்திரம் OLYMPIA, OPTIMA விற்பனைக்கு உண்டு. R மருதலிங்கம், 8/1 அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (5590)

### சலனம்

சென்னைபிலிம்சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய இருமாத சினிமா இதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி யாழ்ப்பாணம். (5592)

### ஸ்ரீகாந்த்புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனறிகள், இலங்கை வெளியீடுகள், ஆங்கில தமிழ் சொற் களஞ்சியம், (மட்றாஸ் டிக்செனறி)கொமிக்ஸ் மங்கை மலர் கழிவுவிலையில் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் (சி-7071)

### மிருதங்கம்

மிருதங்க முழு வேலையும் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (5541)

### தேவை

$\frac{1}{4}$'' (அங்குலம்) இரும்புக் கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் $2\frac{1}{2}$' (அடி)க்கு மேல்இருத்தல் வேண்டும். தொடர்புகட்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-7098)

### இலவச

அக்குபஞ்சர் சிகிச்சை

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



### 2-ம் லெப். சபேசன்

[செந்திவடிவேலு ரஜசித்குமார்]

வல்வெட்டித்துறை

தாயின் மடியில் 12-05-1972

தமிழீழமண்ணில் 05-08-1990


திதி: 01-08-1993

வல்வை தனில் பிறந்து
வாளாட்ட வந்த சிங்களரை
கொல்வேனென எழுந்தாய்
யாழ்கோட்டையிலே களம் புகுந்து
புல்லர்களைப் பொசுக்கிவிட்டு
புயலாக மறைந்தனையோ.

''பொன்னாவில்லா''
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி. (5564) -குடும்பத்தினர்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

எம்முடன் சேர்ந்தது 20-8 1975



வீரமுடன் பிரிந்தது 1-8-1991

### வீரவேங்கை அலெக்ஸ்

(பூபாலசிங்கம் பவளகாந்தன் - கண்ணன்)

கண்ணா! உனை நினைத்துக் கலங்காத நாட்களில்லை,
தானைத் தலைவன் தான் உரைகேட்டு
தமிழீழம் காக்க ஆனையிறவில் அணிசேர்ந்து,
''நான் பிறந்த பச்சிலைப்பள்ளியை துரோகி!
நீ மிதிக்க நான் விடுவதா ?'' சூழ் உரைத்து
வீரமுடன் வீறு கொண்டெழுந்தாய்,
மானமுடன் நீ மாண்டாய்,
கண்ணா! உனை நினைத்துக் கலங்காத நாட்களில்லை,

## இருக்கு, யசுர் வேத உபாகருமம்

எதிர்வரும் 2-8-93 திங்கட்கிழமை காலை7 மணிக்கு பிரமோபதேசம் பெற்ற அந்தணர்களுக்கான இருக்கு வேத, யசுர் வேத உபாகரும கிரியைகள் ஓமங்கள், ஜெபங்கள் என்பன இந்துமதகுருமார் ஒன்றியத்தின் சார்பில் நடைபெற உள்ளது. தென்மராட்சிக்கிளை அங்கத்தவர்களுக்கு சாவகச்சேரி மட்டுவில், நெல்லியடி விநாயகர் மண்டபத்தில் சிவஸ்ரீ கி சோமசுந்தரக் குருக்கள் தலைமையிலும், வடமராட்சி கிளை அங்கத்தவர்களுக்கு பருத்தித்துறை சிவன் கோவில் பர்வதபத்தினி மண்டபத்தில் சிவஸ்ரீ S. இராமநாதக் குருக்கள் தலைமையிலும் வலிகாமம், தீவக அங்கத்தவர்களுக்கு யாழ் நீராவியடி கடைச்சாமி ஒழுங்கை நடேசப் பெருமான் ஆலய மண்டபத்தில் சிவஸ்ரீ. கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையிலும் மேற்படி நிகழ்ச்சிகள் இலவசமாக இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பில் நடைபெறும். எனவே அங்கத்தவர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

22, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்படிக்கு
நிர்வாகம்.

(சி-7108)

## 45-ம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 04-08-1968

உதிர்வு: 17-06-1993

### தவராசா ரவிபாலன் [வேங்கை]

[நாவலடி உடுப்பிட்டி]

[வதனா மரக்காலை உரிமையாளரின் மகனாவார்]

எங்கள் அன்பிற்கினிய தந்தையே
திக்கற்று காடுமாறி நின்றிலும்
இணை சேர்ந்து தனி வழிதாம் நடந்து
தம் வழியே தாம் திரும்பி
எம்இன சகோதர தாய்வயிற்றில் தான்வரை
தன்மானம் தான்காக்க தான் தப்ப
எம்மை எல்லாம் தான்மறந்து மாண்டீரோ
எம்மை எல்லாம் காப்பது அப்பப்பாவோ?
தாத்தாவோ?
காலமெல்லாம் மாறாது எம் துயரமப்பா.

மனைவி: உதயா
பிள்ளைகள்: நிஷாந் உஷாந்
பெற்றோர்,
சகோதரர்கள்.

தற்போதைய முகவரி:
வதனா கைத்தொழிற்சாலை,
வரணி. (5533)

## 2-ம் ஆண்டு இதய அஞ்சலி

யாழ். பகுதி தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி (மட்டு)

கணக்கு - இலிகிதர் [உணவகம் உற்பத்திசாலை]

## பதவி வெற்றிடம்

மேற்காண் பதவிக்கு யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: கணக்கு - இலிகிதர் (உணவகம் - உற்பத்திசாலை)

குறி. இல: 302 : 8

சம்பளத்திட்டம்: (10) 1005/- — 1705/- / 40 x 5 : 50 x 10

அத்துடன் சங்கங்களினால் வழங்கப்படும் சகல படிகளும்

தகைமை: க. பொ. த (உயர்தரம்) சித்தியுடன் 2 வருட காலசேவை அனுபவம் அல்லது க. பொ. த (சாதாரணதரம்) சித்தியுடன 5 வருடகால சேவை அனுபவம.

வயது: 7-8-93 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்

விண்ணப்ப முடிவு திகதி: 07-08 93

விண்ணப்பங்களை நீங்களே சுய விபரங்களுடன் தயாரித்து ''பொது முகாமையாளர்''- யாழ். பகுதி தெங்கு ப பொ கூ ச கொத்தணி 370, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தபால் மூலம் அல்லது நேரில் அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்
யாழ்.பகுதி தெ. ப. பொ. கூ. ச. கொத்தணி (மட்டு)
யாழ்ப்பாணம்.
30-7-93 (சி-7107)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-08-01

1989ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - கச்சக்கொட்டைத்தீவுப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் ரஜனி** [சின்னத்தம்பி புஸ்பராஜா - 2-வது கொலனி, கந்தளாய் - திருமலை]

வல்வெட்டித்துறை - பொலிகண்டிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழிளைஞர்கள்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**வின்சன்** [எரிக்டன் ஜோண்சன் - 3-ம் கட்டை, செல்வநாயகபுரம் - திருமலை]

முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட

மிருதங்க முழு வேலையும் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (5541)

## தேவை

½'' (அங்குலம்) இரும்புக் கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½' (அடி)க்கு மேல்இருத்தல் வேண்டும். தொடர்புகட்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-7098)

## இலவச அக்குபஞ்சர் சிகிச்சை

01-08 93 ஞாயிற்றுக்கிழமை முதல் 35 ஐந்து சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தால் இலவச வைத்திய சேவை நடைபெறும். தலைவர் Dr T புவிராசன் (5579)

## விற்பனைக்கு

புதிய முதிரைப் பலகைகள் அகலம் 12''-24'' வரைவிலை சதுர அடி ரூபா 110/- முதல் 130/- வரை சில்லறையாகவும் விற்கப்படும் தொடர்பு: கு வலலிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (5580)


## றேடியோ மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வைண்டிங்கடிகாரங்கள் 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள் 125/- எலக்ரோனிக் கடிகாரங்கள்- 90/- -150/-மேசை சுவர் மணிக்கூடுகள் -100-200/- றேடியோ மட்டும்150/- கசற்றேடியோ— 200/- இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும் டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7087)

## மலிவ விற்பனை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க டருத்தித்துறைப் பிரிவு நடத்தி வந்துள்ள தையல் பயிற்சி மாணவர்களது தையல் கண்காட்சியும் மலிவுவிற்பனையும் இன்று முற்பகல் 10-00 மணிக்கு வல்வெட்டித்துறை மத்திய பேரூந்து நிலையத்திற்கருகாமையில் உள்ள தையல் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

20-8 1975



வீரமுடன்
பிரிந்தது
1-8-1991

## வீரவேங்கை அலெக்ஸ்

(பூபாலசிங்கம் பவளகாந்தன் – கண்ணன்)

கண்ணா! உனை நினைத்துக் கலங்காத நாட்களில்லை,
தானைத் தலைவன் தான் உரைகேட்டு
தமிழீழம் காக்க ஆனையிறவில் அணிசேர்ந்து,
''நான் பிறந்த பச்சிலைப்பள்ளியை துரோகி!
நீ மிதிக்க நான் விடுவதா ?'' சூழ் உரைத்து
வீரமுடன் வீறு கொண்டெழுந்தாய்,
மானமுடன் நீ மாண்டாய்,
கண்ணா! உனை நினைத்துக் கலங்காத நாட்களில்லை.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

கச்சார் வெளி,
பளை. (5545)
–குடும்பத்தினர்.

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



## வீரவேங்கை சுதன்

[இராசரத்தினம் ஜீவகுமார்]

(ஆகாய-கடல்-வெளி சமரில் வீரச்சாவு)

பிறப்பு 1970-05-15 — வீரச்சாவு 1991-08-01

தாய் நாட்டுக்காய் வீட்டைத் துறந்து சென்றாய்
விடியலின் பாதையில் வீழ்ந்த மலரானாய்
ஏங்கிய விழிகளுடன் உன்னை தேடுகிறோம்
நீ தாங்கிய கனவினைச் சுமந் வாழுகிறோம்
நீ நடந்த பாதையிலே - உன்
காலடி தெரிகிறது உன்னைக் காணவில்லை.

உன் நினைவில் என்றும்,
அம்மா, அப்பா,
சகோதரர்.

வவுனியா.
(5586)

## தவராசா ரவிபாலன் [வேங்கை]

[நாவலடி உடுப்பிட்டி]


[வதனா மரக்காலை உரிமையாளரின் மகனாவார்]

எங்கள் அன்பிற்கினிய தந்தையே
திக்கற்று காடுமாறி நின்றிலும்
இணை சேர்ந்து தனி வழிதாம் நடந்து
தம் வழியே தாம் திரும்பி
எம்இன சகோதர தாய்வயிற்றில் தான்வரை
தன்மானம் தான்காக்க தான் தப்ப
எம்மை எல்லாம் தான்மறந்து மாண்டரோ
எம்மை எல்லாம் காப்பது அப்பப்பாவோ?
தாத்தாவோ?
காலமெல்லாம் மாறாது எம் துயரமப்பா.

மனைவி: உதயா
பிள்ளைகள்: நிஷாந் உஷாந்
பெற்றோர்,
சகோதரர்கள்.

தற்போதைய முகவரி:
வதனா கைத்தொழிற்சாலை,
வரணி. (5533)

## 2-ம் ஆண்டு இதய அஞ்சலி



வடமராட்சி தாக்குதல் படைப்பிரிவுத் தளபதி

## மேஜர் கணேஷ்

(வைத்திலிங்கம் துரைவடிவேல்)

அன்னை மடியில்: 02-06-1970 — ஆ. க வெ. களத்தில்: 01-08-1991

ஆனையிறவில் விதையானது உன் வீரம்
அணிதிரளும் வீரர்க்கு நீயொரு தூபம்
தானையின் தீரர்க்கு உன்செயல் வேதம்
தமிழீழத்தில் என்றும்—ஒலிக்கும் உன் கீதம்
எங்களின் இதயத்தில் நீஅணையாத தீபம்.

M A. S. S.
மாணிக்க இடைக்காடர் வீதி,
இடைக்காடு. (5538)

இடைக்காடுவாழ்
நண்பர்கள்.

## நினைவு கூருகின்றோம்...

## 1993-08-01

1989ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - கச்சக்கொட்டைத்தீவுப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் ரஜனி** [சின்னத்தம்பி புஸ்பராஜா - 2-வது கொலனி, கந்தளாய் - திருமலை]

வல்வெட்டித்துறை - பொலிகண்டிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழிளைஞர்கள்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**வின்சன்** [எரிக்டன் ஜோண்சன் - 3-ம் கட்டை, செல்வநாயகபுரம் - திருமலை]

முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண் அடைந்து மருத்துவமனையில் எமைப் பிரிந்த -

**காண்டீபன்** [சுப்பையா பாலகிருஷ்ணன் - தாவடி - யாழ்]

மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட கரடியனாறு உறுகாமத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதே பகுதியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

கிளிநொச்சி - லக்சபானாச் சந்தியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவனாகிய உதயநகரைச் சேர்ந்த தமிழிளைஞன்.

யாழ் - திருநெல்வேலியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோககி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**லெப். உபாலி** [இராசதுரை பிரபாகரன் - 2-ம் கண்டம், முத்தையன்கட்டு - முல்லைத்தீவு]

**சுதன்** [இராசரத்தினம் ஜீவகுமார் - பூவரசங்குளம் - வவுனியா]

**2-ம் லெப். காஸ்ரோ** [நடேசபிள்ளை சுபாகரன் -162-ம் கட்டை, கண்டிவீதி - கிளிநொச்சி]

வடமராட்சி தாக்குதல் படைப்பிரிவுத் தளபதி

**மேஜர் கணேஷ்** [வைத்திலிங்கம் துரைவடிவேல்- தொண்டமானாறு, உடுப்பிட்டி - யாழ்]

**லெப். கணன்/கணாட்** [நாகமுத்து கலியுகவரதன் - தாளையடி, உடுத்துறை - யாழ்]

**அலெக்ஸ்** [பூபாலசிங்கம் பவளகாந்தன் - கச்சார்வெளி-பளை]

**அசோக்** [கதிர்காமநாதன் ரகுநாதன்-சங்கத்தார்வயல், இயக்கச்சி - பளை]

மட்டு - ஏறாவூர்ப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தளவாயைச் சேர்ந்த தமிழ் கடற்றொழிலாளி

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7106)

சிந்தனைக்கு

குற்றங்களைத் தண்டிப்பதை விடவும்
அவற்றை தடுப்பது மேலானதே
ஸீஸர் தெ பெக்காரியா


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-08-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


# அரசின் புறக்கணிப்பால் விளைவு விபரீதமாகலாம்?

இரண்டாவது முறையாக போர்க் கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து மூன்றாவது நாள் முடிவுற்ற நிலையிலும், சிறிலங்கா அரசாங்கம் இது குறித்து அக்கறை எதுவும் காட்டுவதாகத் தெரியவில்லை. மாறாக இராணுவத் தாக்குதலிலேயே பெரும் அக்கறை காட்டி வருகின்றது.

''சென்றமுறை ஐந்து தினங்களில் ஏற்பட்ட சோர்வும், பலவீனமும் எனக்கு இப்பொழுதே ஏற்பட்டுவிட்ட''தென உண்ணாவிரதமிருக்கும் போர்க் கைதிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்த இரண்டாவது நாளே தெரிவித்துள்ளனர். இந்நிலையில், உண்ணாவிரதம் தொடருமானால் கைதிகள் மிக விரைவில் மோசமான கட்டத்தை அடைந்துவிடக் கூடும்.

ஆனால், இது சிறிலங்கா அரசாங்கம் புரிந்து கொள்ள முடியாததும் அல்ல. அதேவேளை, இது குறித்த தகவல்கள் கிடைக்கப் பெறாமல் இருக்கவும் வாய்ப்புக்கள் இல்லை. அவ்வாறு கிடைக்காமல் இருப்பதானால் அது சிறிலங்காவின் புறக்கணிப்பாக இருக்குமே ஒழிய ஒருபொழுதும் தகவல் கிடைப்பது குறித்த நெருக்கடியாக இருக்க முடியாது.

மேலும், கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளும் முன்னரே இது குறித்து அரச தரப்பினருக்கும், வேறும் பலருக்கும் அவர்கள் அறிவித்துளளனர். இந்நிலையில் ஜனாதிபதி, இராணுவ தளபதி. எதிர்க்கட்சிகள் உட்பட பலருக்கும் உண்ணாவிரதம் ஆரம்பமாகப் போவது குறித்து முன் கூட்டியே அறிந்தும் உள்ளனர்.

அடுத்ததாக கைதிகள் கடந்தமுறை உண்ணாவிரதத்தின்போது ஏழு நாள்கள் வரை ஆரோக்கியமாக இருந்ததுபோல் இம்முறையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், கடந்த உண்ணாவிரதத்தின்போது ஏற்பட்ட பாதிப்பில் இருந்து கைதிகள் இன்னும் முழுமையாக மீண்டு வரவில்லை. இந்நிலையில் உண்ணாவிரதம் குறித்து தாமதமின்றி முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய அவசியம் உண்டு.

# வடபகுதி வரும் கப்பல்கள் காங்கேசனுக்கே முதலில்

## இராணுவம் உத்தரவு

[கொழும்பு]

உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வடபகுதிக்கு வரும் கப்பல்கள் இனிமேல் காங்கேசன்துறை துறைமுகத்திற்குச் சென்று அங்கு படையினரால் பொருள்களின் பட்டியல் பரிசீலிக்கப்பட்ட பின்னரே பருத்தித்துறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் றுகுணு கப்பல் தடை செய்யப்பட்ட பொருள்களுடன் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்ததும், அவை இறக்கமுற்பட்டபோது நேர்ந்த பரபரப்பான சம்பவத்தையடுத்தே கூட்டுப்படைத் தலைமையகம் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

வடக்கே பொருள்களை ஏற்றிச் செல்லும் சகல கப்பல்களும் முதலில் காங்கேசன் துறைக்குச் செல்ல வேண்டும் என்று சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனங்களுக்கும். கப்பல் கப்டன்களுக்கும் கூட்டுப் படைத் தலைமை பணிப்புரை விடுத்துள்ளது.

முன்பு வடக்கே பொருள்களுடன் வரும் கப்பல்கள், பருத்தித்துறை துறைமுகத்திற்கு பகல் நேரத்தில் வந்து சேர்ந்தால் உடனேயே இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் கடத்திய 1600 பெண்கள் சிறையில்

(கொழும்பு)

போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் சம்பந்தமாக சிறிலங்காவில் 1,600க்கும் அதிகமான பெண்கள் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். சிறை வைக்கப்பட்டுள்ள பெண்களில் சிலர் ஆண்களுக்கு உதவியாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் இலங்கையில் சிறைகள் போதைப் பொருள் குற்றவாளிகளால் நிரம்பி வழிவதாகத் தெரியவருகிறது. சிறைவாசம் அனுபவிப்பவர்களில் 47 சதவிகிததினர் போதைப் பொருள் குற்றவாளிகள் என்றும் இதனில் 25 சத விகிதத்தினர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது

1990இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி 14,128 பேர் தீர்ப்பளிக்கப்பட்ட குற்றவாளிகள் இவர்களில் 6654 பேர் போதைப் பொருள் குற்றவாளிகள். போதைப் பொருள் பாவனை சிறிலங்காவில் வேகமாக அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 1980இல் ஹெரோயின் பாவிப்பவர்கள் பற்றிய அறிக்கை எதுவும் இல்லை. 1992இல் போதைப் பொருள் பாவனையில் நேரடியாக ஈடுபட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 9,705 ஆகும். ஆகவே போதைப் பொருள் பாவனை 24.26 விகிதமாக அதிகரித்துள்ளது.

வருடமொன்றுக்குப் போதைப் பொருள் பாவனையாளர் 2 பில்லியன் ரூபாவை செலவு செய்கின்றனர் என சிறிலங்கா போதைப் பொருள் தடுப்புச் சங்கம் தெரிவித்துள்ளது. போதைப் பொருளுக்கு அடிமையானவர், நாளொன்றுக்குப் போதைப் பொருள் நுகர்ச்சிக்காக 150 ரூபா செலவிடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

11 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களே போதைப் பொருளால் அதிகம் கவரப்படுவதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ. க. வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் தற்போது வெளிவந்துள்ளன.

1. லெப். திலக் - சேதுலிங்கம் கிருஷ்ணவரதன் - வல்வெட்டித்துறை
2. லெப். ஜெயா - செல்லையா நடராசா - செங்கலடி - மட்டு
3. வீரவேங்கை அறிவொளி - சிறிபத்மநாதன் சத்தியசீலன் - சுண்டிக்குளி - யாழ்.
4. வீரவேங்கை மணிவாசகன் - கணேசநாதன் ஜனார்த்தனன் - இணுவில் கிழக்கு
வீரவேங்கை லோ - சின்னத்தம்பி அமிர்தலிங்கம் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு
6. வீரவேங்கை அகல்யா - சந்திரகலா கைலாயபிள்ளை - துணுக்காய்

1991-ம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மேல்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்கள் சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை. கொக்குவிலில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

# சுடுமணலிலும் உப்புநீரிலும் மாதக்கணக்கில் காவல் புரிந்தனர்

## கரிகாலன்

ஆ. க. வெ. சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவுக் கூட்டம் நேற்று இரவு 7.30 மணியளவில் கொடிகாமத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலய முன்றலில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்நினைவுக்கூட்டத்தில்தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்திரு. கரிகாலன் உரையாற்றுகையில்;

இன்று ஆகாயம், கடல், வெளி இராணுவ நடவடிக்கையில் வீரச்சாவை தழுவிக்கொண்ட போராளிகளின் நினைவாலயத்தை திறந்து வைத்ததோடு அவர்களின் உருவப் படங்களையும் தரிசித்து இரண்டாவது ஆண்டின் நினைவு நாளை நாம் நினைவுகூருகின்றோம்.

இவ்வாறு நினைவுகூருகின்ற நேரத்திலே அந்த ஒவ்வொரு போராளியும் இந்தச் சமரிலே தனது பங்களிப்பை எவ்வாறு செலுத்தினான் அந்த சமரில் எவ்வாறு நின்று போர் புரிந்தான் என்பதனை நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த மாவீரர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மண்ணை மீட்பதற்காக அந்த பரந்த வெளியிலே சுடுமணலிலும் உப்புநீரிலும் மாதக்கணக்கிலே காவல் கிடந்து பசியோடும், பட்டினியோடும் தங்கள்

...றோர் படையணி உண்டுஎன்பதை நிறைவேற்றி சர்வதேசமே சிறிலங்காவில் இரண்டு படை மோதுகின்றன என்று சொல்லுமளவிற்கு, ஆனையிறவுச் சமரின் மூலம் எமக்கென்றோர் படையணி உண்டு என்பதை உலகிற்கு உணர்த்தியுள்ளோம் என்றார்.

இந் நினைவுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி திரு. கருணா அம்மான், விடுதலைப்புலிகள் மகளிர் அணி துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், வன்னிமாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. மனோ, யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி மன்னார்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. கணேஷ், யாழ். மாவட்டஅரசியல்துறை பொறுப்பாளர்திரு இளம்பரிதி ஆகியோரும்உரையாற்றினார்.

கடற்போரில்

...ளது. ஆனால் எங்களுடைய பரப்பில் எங்களுடைய கரையினது நிலைப்பாடுகளும் கரை அமைப்புகளும் உங்கள் எல்லோருக்கும் தெரியும், நாங்கள் ஒரு பாரிய கடற்படை அல்ல தற்சமயம் கடலில் கெரிலாக்கள் மட்டுமே இந்த நிலையில் இரவு 7 மணிக்குத்தான் எங்களால் பாதுகாப்பு நேரத்தை ஆரம்பிக்க கூடியதாகவுள்ளது பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படும் 7ற்கு மேற்பட்ட படகுகளையும் தயார் நிலைப் படுத்துவதாக இருந்தால் அந்தப்படகுகளை பாதுகாப்பான இடங்களில் இருந்து கொண்டு வந்து சேர்த்துகடலில் இறக்குவதற்கு இரண்டுமணி நேரம் எடுக்கிறது. ஆதலால் தான் எமது பாதுகாப்புநேரம் 7மணிக்கு ஆரம்பிக்கப்படுகிறது. அதிகாலை 4மணியுடன்எமதுபாது...

...கிறது. ஆனால் எம்மைப் பொறுத்தவரைஎமது படைக்கு எமது மனோபலம் மட்டும் தான் உண்டு இந்த நிலையில் நாம் 4 மணிக்கு எமது பாதுகாப்பை முடித்தால் தான் காலை 6 மணிக்கு முன் எமது படகுகளை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியும்.

இன்றைக்கு ஒரு நாட்டின் கடற்படையை விஸ்தரிக்கப் படவேண்டுமாக இருந்தால் 1000 கோடி ரூபாவிற்கு மேல் செலவாகிறது. நாம் இந்த கோடி பெறுமதியான யுத்தப் படகுகளோடு எம்மால் நிர்மாணிக்கப்பட்ட படகுகளும் இயந்திரங்களும் சுமார் 25 இலட்சம் அளவிற்கு நிதியை இந்தப் படகு கட்டுமானதிற்காகவும் படகுக்காகவும் செலவிடுகிறோம்.

அன்றையதினம் பாதுகாப்பை முடித்து கரைஏற்றப்பட்...

தமிழரின்

...களாலும் இந்த ஆனையிறவுச் சமர் எமது இனத்தின்-தமிழினத்தின்-வீரம் செறிந்த நாட்களாக பதிவு செய்யப்பட்டது.

இயக்கப்போராளிகளின் எண்ணிக்கையினால் எண்ணப்பட்டு வந்த தமிழர்களின் போர்ப் படையானது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் எண்ணிக்கையினால் எண்ணப்பட்ட புதிய வரலாறு இந்த ஆனையிறவு போர்க்களத்திலே நாம் கண்டோம்.

எமது வீடுகளில் அன்புச் சகோதரிகளாகவும் ஊட்டி, பராமரித்து வளர்க்கப்பட்ட எமது சகோதரிகள் ஆயுதம் ஏந்தி நாட்கணக்காக ஏன் வாரக்கணக்காகவும் அதற்கு மேலாக மாதம் தொடும் வரை...

...போராளிகளின் ஆத்மஉறுதியையும் எமது அருந்தலைவனின் உறுதியான வழிநடத்தலையும் தான். அந்தவகையில் நாம் அருமையான பாடங்களைக் கேட்டோம். வெற்றிகளுக்கும் தோல்விகளுக்கும் அப்பால் நாம் மனஉறுதிக்கும் படைகலத்திற்குமான ஓர் யுத்த களத்தில் நின்றோம். அந்த யுத்த களத்திலே எமது மனஉறுதி, உறுதியுடன் வென்றது. நாம் உறுதியுடன் நின்றோம் என்று தான் இன்றும் என்றும் பெருமை கொள்வோம். அந்த மனஉறுதியின் வெளிப்பாடு நாம் ஆனையிறவுச் சமர்க்களத்தில் கணிசமான அளவு அழிவுகளைப் பெற்றோம். 602 போராளிகள் ஆயிரக்கணக்கான போராளிகளின் காயங்களினா...

கிடைக்காமல் இருப்பதனால் அது சிறிலங்காவின் புறக்கணிப்பாக இருக்குமே ஒழிய ஒருபொழுதும் தகவல் கிடைப்பது குறித்த நெருக்கடியாக இருக்க முடியாது.

மேலும், கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளும் முன்னரே இது குறித்து அரச தரப்பினருக்கும், வேறும் பலருக்கும் அவர்கள் அறிவித்துள்ளனர். இந்நிலையில் ஜனாதிபதி, இராணுவ தளபதி, எதிர்க்கட்சிகள் உட்பட பலருக்கும் உண்ணாவிரதம் ஆரம்பமாகப் போவது குறித்து முன் கூட்டியே அறிந்தும் உள்ளனர்.

அடுத்ததாக கைதிகள் கடந்தமுறை உண்ணாவிரதத்தின்போது ஏழு நாள்கள் வரை ஆரோக்கியமாக இருந்ததுபோல் இம்முறையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், கடந்த உண்ணாவிரதத்தின்போது ஏற்பட்ட பாதிப்பில் இருந்து கைதிகள் இன்னும் முழுமையாக மீண்டு வரவில்லை. இந்நிலையில் உண்ணாவிரதம் குறித்து தாமதமின்றி முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய அவசியம் உண்டு.

ஆனால், அரசாங்கம் இது குறித்துப் பெரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. உண்ணாவிரதம் தொடர்பான செய்திகளை இருட்டடிப்புச் செய்ய முற்பட்டுள்ளதோடு, தனக்கும், உண்ணாவிரதத்திற்கும் தொடர்பு எதுவுமில்லை என்பதுபோல் நடந்து கொள்கின்றது. இதற்கு ஏற்றாற்போல் சிங்களப் பேரினவாத சக்திகளும் இது குறித்து மௌனம் சாதிக்கின்றன.

இதேவேளை, அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியுள்ளது. இதனை வெளிக்காட்டுவதுபோல் வடபகுதி மீது விமானத் தாக்குதலை நடத்தத் தொடங்கியுள்ளது. கடந்த சில நாள்களாக மேற்கொண்டும் வருகின்றது. இதன் காரணமாகப் பலர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்தும் உள்ளனர்.

இந்நிலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் விவகாரத்தை அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகின்றது என்பது கேள்விக்குரியதே. கைதிகளை விடுதலை செய்ய முயற்சிக்காது இராணுவத் தாக்குதலை அதிகப்படுத்தி வருவதானது, இராணுவத் தாக்குதலின் மூலம் உண்ணாவிரதம் பற்றிய தகவல்கள் வெளிவராமல் மறைந்து விடலாம் என அரசாங்கம் கருதுவதுபோல் தெரிகின்றது. ஆனால் இது ஒரு விபரீதமான விளையாட்டாகவே இருக்கும். இதனால் ஏற்படும் சகல விளைவுகளுக்கும் அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டியும் வரும்.

# உயர்தரப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் நாளை நடைபெற இருக்கும் க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்து விட்டதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சுமார் 67 பரீட்சை நிலையங்களிற்கும் பரீட்சைக்கான காகிதங்கள் விநியோகிக்கப்பட்டு விட்டதாகவும் அப்பரீட்சை நிலையங்களின் மேற்பார்வையாளர்களை ஒழுங்கு செய்யும் வேலைகள் யாவும் பூர்த்தி எய்தியதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் பரீட்சார்த்திகள் திறமையான முறையில் இப் பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொருள் குற்றவாளிகள். போதைப் பொருள் பாவனை சிறிலங்காவில் வேகமாக அதிகம் கவரப்படுவதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தமிழரின்

காலாலும் இந்த ஆனையிறவுச் சமர் எமது இனத்தின்-தமிழினத்தின்-வீரம் செறிந்த நாட்களாக பதிவு செய்யப்பட்டது.

இயக்கப்போராளிகளின் எண்ணிக்கையினால் எண்ணப்பட்டு வந்த தமிழர்களின் போர்ப் படையானது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் எண்ணிக்கையினால் எண்ணப்பட்ட புதிய வரலாறு இந்த ஆனையிறவு போர்க்களத்திலே நாம் கண்டோம்.

எமது வீடுகளில் அன்புச் சகோதரிகளாகவும் ஊட்டி, பராமரித்து வளர்க்கப்பட்ட எமது சகோதரிகள் ஆயுதம் ஏந்தி நாட்கணக்காக ஏன் வாரக்கணக்காகவும் அதற்கு மேலாக மாதம் தொடும் வரை தொடர்ந்து நின்று போர் செய்த அந்த வீரமான நாட்கள் ஆனையிறவுச் சமர்க்களத்தில்-எமது தமிழீழத்தில்-பதிவு செய்யவைத்தன.

ஆனையிறவுப் போர்க்களம் இது எல்லாவற்றிற்கும்மேலாக இந்த உலகிற்கு ஒரு செய்தியைச் சொன்னது - அதற்கும் மேலாக பொதுமக்களுக்கு ஒரு நம்பிக்கையை சொன்னது. நாம் எமது நாட்டிலே சுதந்திரமான ஒரு சொந்த அரசை நிறுவிஅதை பாதுகாத்து-நாம் தமிழீழ மக்கள் இந்த நாடு எமது தமிழீழ நாடு என்று நாம் பெருமைகொண்டு உரிமையுடன்எமதுசொந்த அரசை நிறுவி அதைப் பாதுகாத்து நாமே நமதுநாட்டை அமைக்க எமக்கு உறுதியான ஒரு படை உண்டு. அந்தப் படையால் எமது நாட்டுக்கான போராட்டத்தை, எமது நாட்டுக்கான இராணுவத்தை அமைக்க முடியும்-அமையமுடியும் என்ற செய்தியை உலகிற்கு மட்டுமல்ல, எமது எதிரிக்கு மட்டுமல்ல, எமது மக்களுக்கும் உறுதியாக உணர்த்தி நின்றது இந்த ஆனையிறவுச் சமர்.

இன்றைய எமது தேவை உறுதியுள்ள ஓர் இனம். தனது சுதந்திரத்திற்காக எவரிலும்-எவர்மீதும் தங்கியிருக்காது தனது சுதந்திரத்திற்கு தன்னையேநம்பி, தன்னைஅடிமை கொள்ள நினைக்கும் எவரையும் எதிர்த்துநின்று எமதுநாட்டிற்காக- எமதுநாட்டின் சுதந்திரத்திற்காக போராடும் ஓர் வீரமுள்ள இனம் அந்தவகையிலே ஆனையிறவுச் சமர்க்களம் கடுமையான செய்தியை எமது இனத்திற்கு ஒரு மொத்தத் தமிழினத்திற்கும் காட்டியுள்ளது.

ஒப்பிட்டளவிலே நாம் ஓர் மரபுவழி இராணுவமாக அமையக் கூடிய அளவில் எமது பலத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. ஆனாலும் கூட நாம் ஒரு மரபுரீதியான யுத்தத்தில் நின்றோம். நாம் கவசமாக வைத்திருந்தது, எமது

போராளிகளின் ஆத்மஉறுதியையும் எமது அருந்தலைவனின் உறுதியான வழிநடத்தலையும் தான். அந்தவகையில் நாம் அருமையான பாடங்களைக் கேட்டோம். வெற்றிகளுக்கும் தோல்விகளுக்கும் அப்பால் நாம் மனஉறுதிக்கும் படைகலத்திற்குமான ஓர் யுத்த களத்தில் நின்றோம். அந்த யுத்த களத்திலே எமது மனஉறுதி, உறுதியுடன் வென்றது. நாம் உறுதியுடன் நின்றோம் என்று தான் இன்றும் என்றும் பெருமை கொள்வோம். அந்த மனஉறுதியின் வெளிப்பாடு நாம் ஆனையிறவுச் சமர்க்களத்தில் கணிசமான அளவு அழிவுகளைப் பெற்றோம். 602 போராளிகள் ஆயிரக்கணக்கான போராளிகளின் காயங்களினாலும்மிகக்கணிசமான அளவு போராளிகள் போர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்தார்கள்.

அந்தவேளையிலே எதிரி எமது இதயமான மணலாறை பிடிக்க யுத்தம் தொடுத்தான். அந்த யுத்தம் வெல்லப்படுமா என்ற கேள்வி எமது மக்கள் மத்தியில் ஏற்பட்டது பலவீனமான புலிப்படையை சுலபமாக வென்று விடலாம் என்று கணக்குப்போட்டு எமது மணலாற்றுக் காட்டுக்குள் புகுந்த எதிரி மிகக்கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தான்

3000 போராளிகளுக்கு மேல் போர்க்களத்திலிருந்து விலகி நின்ற- ஆனையிறவுச் சமர் முடிந்த- அந்த நேரத்தில் கண்ட யுத்தத்தில் எமது போராளிகள் ஆனையிறவுச்சமர் அளவிற்கு உறுதியைக் காட்டினார்கள். அங்கே ஆனையிறவுப்போர்க்களத்தில் எதிரியால் எமது போராளிகளின் மனவுறுதியை உடைத்துவிட முடியவில்லை. உலகமே வியந்து நின்றது என்றால் அது எமது போராளிகளின் மனவுறுதி தான் எமது தலைவனின் வழிநடத்தல் தான்அந்த வழிநடத்தலிலே எமது போராளிகளின் உறுதியை எதிரியால் அழித்துவிட முடியவில்லை. ஆனையிறவுச்சமர்க்களத்தில் நாம் உறுதியுடன் நின்றதைக்கண்டு வியந்த உலகம் அதைத் தொடர்ந்து புலிகள் தோற்று விடுவார்கள் பலவீனப்பட்டுவிடுவார்கள் என்று கணக்குப் போட்டது. அந்தக் கணக்குகள் எல்லாம் தப்புக் கணக்குகள் என்று கடந்த இரண்டு ஆண்டுகளில் எமது மக்களுக்கும் இந்த உலகிற்கும் தெளிவான செய்தியை விட்டுச் சென்றுள்ளது. ஆனையிறவுச் சமர்க்களத்தின் படிப்பினையின்படி நாம் பலபாடங்களைக் கற்றோம். தற்போது தமிழீழத்தின் இதயமாம் மணலாற்றின் மிக முக்கியமான

இன்று ஆகாயம், கடல், வெளி இராணுவ நடவடிக்கையில் வீரச்சாவை தழுவிக்கொண்ட போராளிகளின் நினைவாலயத்தை திறந்து வைத்ததோடு அவர்களின் உருவப் படங்களையும் தரிசித்து இரண்டாவது ஆண்டின் நினைவு நாளை நாம் நினைவுகூருகின்றோம்.

இவ்வாறு நினைவு கூருகின்ற நேரத்திலே அந்த ஒவ்வொரு போராளியும் இந்தச் சமரிலே தனது பங்களிப்பை எவ்வாறு செலுத்தினான் அந்த சமரில் எவ்வாறு நின்று போர் புரிந்தான் என்பதனை நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த மாவீரர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மண்ணை மீட்பதற்காக அந்த பரந்த வெளியிலே சுடுமணலிலும் உப்புநீரிலும் மாதக்கணக்கிலே காவல் கிடந்து பசியோடும், பட்டினியோடும் தங்கள் உடலை வருத்தி இந்த மண்ணிற்காக போர் புரிந்த அந்த நாட்களை நாங்கள் நினைவு கூர வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்றார்.

விடுதலைப் புலிகள் அரசியல்துறை பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா உரையாற்றுகையில், ஒரு இனம் தன்னாட்சி உள்ள இனம் என்று கருதப்படுவதற்கு அந்த இனத்திற்கு நிலம், மொழி, கலை பண்பாடு அரசியல் பொருளாதார வளம் வரலாறு என்பன இருக்க வேண்டும். இதைவிட உணர்வுள்ள மக்கள் அந்த இனத்திற்கென்றோர் படையணி வேண்டும். ஆனையிறவுச் சமரின் மூலம் நாம் எமக்கென்

இராணுவமுகாம் வெறும் முப்பது நிமிட நேரத்தில் எமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வரும் அளவிற்கான இராணுவ சாதனையை நிகழ்த்தும் அளவிற்கான வளர்ச்சியை எமது இயக்கம் இன்றுபெற்றுள்ளது. இந்த நீண்ட இரண்டு வருடமும் ஆனையிறவுச் சமர் எங்கள் எல்லோருக்கும்சொல்லும் செய்தி என்ன வென்றால் நாம் உறுதியுடன் நின்றால் எம்மை எவருமேதோற்கடிக்கமுடியாது எம்மால் எமது நாட்டை மீட்க முடியும். எமது நாட்டை மீட்கும் போரில் நாம் துணிந்து நிற்போமாக இருந்தால் எந்த சக்தியாலும் எம்மை அடிமைப்படுத்த முடியாது என்பதே. அந்தவகையிலே இந்த ஆனையிறவுச் சமர்க்களத்தில் வீரச்சாவடைந்த எமது தோழர்களின் செய்தி தெளிவானது முழுமையானது. அவர்களின் செய்தி, - அவர்களின் கனவு நனவாகவேண்டுமெனில்மக்கள் எல்லோரும் போராளிகளாக போராளிகளின் பின்னால் அணிதிரளவேண்டும். எமது விடுதலை வெல்லப்படவேண்டும் என்பதே மாவீரர்களின் கனவு. அவர்களது கனவு நனவாக நீங்கள் எல்லோரும் உழைக்கவேண்டும் என்றார்.

## கடற்போரில்

ளது. ஆனால் எங்களுடைய பரப்பில் எங்களுடைய கரையினது நிலைப்பாடுகளும் கரை அமைப்புகளும் உங்கள் எல்லோருக்கும் தெரியும். நாங்கள் ஒரு பாரிய கடற்படை அல்ல தற்சமயம் கடலில் கெரிலாக்கள் மட்டுமே இந்த நிலையில் இரவு 7 மணிக்குத்தான் எங்களால் பாதுகாப்பு நேரத்தை ஆரம்பிக்க கூடியதாகவுள்ளது பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படும் 7ற்கு மேற்பட்ட படகுகளையும் தயார் நிலைப்படுத்துவதாக இருந்தால் அந்தப்படகுகளை பாதுகாப்பான இடங்களில் இருந்து கொண்டு வந்து சேர்த்துகடலில் இறக்குவதற்கு இரண்டுமணி நேரம் எடுக்கிறது. ஆதலால் தான் எமது பாதுகாப்புநேரம் 7மணிக்கு ஆரம்பிக்கப்படுகிறது. அதிகாலை 4மணியுடன்எமதுபாதுகாப்பு நேரத்தை முடித்துக் கொள்கிறோம். என்னகாரணமென்றால் கரைஇறக்கப்பட்ட அவ்வளவு படகுகளும் வண்டிகளில் மக்களின் துணையோடு தான்ஏற்றப்படுகிறது. இந்த படகுகளை கரைஏற்றுவதற்கு 50க்கு மேற்பட்ட பொது மக்கள் எங்களுடன் பக்கபலமாக இருந்து 90 நிமிடங்களுக்கு மேலாகச் செல்கிறது.

இன்று கடற்படைக்கு பக்க பலமாக விமானப்படை இருக்கிறது. ஆனால் எம்மைப் பொறுத்தவரைஎமதுபடைக்கு எமது மனோபலம் மட்டும் தான் உண்டு இந்த நிலையில் நாம் 4 மணிக்கு எமது பாதுகாப்பை முடித்தால் தான் காலை 6 மணிக்கு முன் எமது படகுகளை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியும்.

இன்றைக்கு ஒரு நாட்டின் கடற்படையை விஸ்தரிக்கப் படவேண்டுமாக இருந்தால் 1000 கோடி ரூபாவிற்கு மேல் செலவாகிறது. நாம் இந்த கோடி பெறுமதியான யுத்தப் படகுகளோடு எம்மால் நிர்மாணிக்கப்பட்ட படகுகளும் இயந்திரங்களும் சுமார் 25 இலட்சம் அளவிற்கு நிதியை இந்தப் படகு கட்டுமானதிற்காகவும் படகுக்காகவும் செலவிடுகிறோம்.

அன்றையதினம் பாதுகாப்பை முடித்து கரைஏற்றப்பட்டபின் நாகதேவன் துறையிலிருந்த சிறிலங்கா படையின் 5 நீருந்து படகுகளும் வந்து வளைத்துத் தாக்குதல்களை பயணிகள் படகுமீது தொடுத்திருக்கிறது. அந்த வேளையில் தான் அவர்கள் கொல்லப்பட்டார்கள்.

நாகதேவன் துறையில் 2 ராடர் சாதனம் பொருத்தப் பட்டுள்ளது. அதன்மூலம் எமது நடமாட்டம் உன்னிப்பாகத் தெரியும். நாம் கடலிலிருந்து வெளியேறி கரை சேர்ந்தோமாகஇருந்தால் அவர்களுடைய ராடர்கள்மூலம் தெரியும்.

நாம் நாளாந்தப் போக்குவரத்து செய்கிறோம். நாளாந்தம் பொது நடவடிக்கைகளை நாங்கள் நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் எங்களுடைய படகுகளை குறிவைத்துத் தாக்குவதாக இருந்தால் எப்பொழுதும் தாக்கலாம் அவர்களுடைய பகுதியில் 40 நிமிட தாக்குதலில் மீட்ட மண்கிண்டிராணுவமுகாமுக்கு தக்க பதிலடி மக்கள் மீது கொடுப்பதற்காகத் தான் நாளாந்தம் நடைபெறுகின்ற விமானக் குண்டுவீச்சும் இந்த கிளாலி சம்பவமும். ஆகவே எமது பொருளாதாரமும் பக்கபலமான உங்களுடைய அரவணைப்பும்இருக்கும்வரை எங்களுடைய கடற்புலிகள் அமைப்பு படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகிறது. இந்த வளர்ச்சிக்காக எங்களுடைய தலைவர் மிகவும் பக்கபலமாக அரவணைத்து உன்னிப்பாக இந்த நடவடிக்கைகளை பார்த்து ஒவ்வொரு கட்டமைப்பையும் செய்து வருகிறார். இந்த நிலையில் இந்தநேரத்தில் இவ்வளவு பாதுகாப்புமட்டும்தான் எங்களால் வழங்கக்கூடியவாறு இருக்கிறது. இந்தப் பாதுகாப்பு கடமை நேரத்தில் மட்டும் உங்களுடைய பயணத்தை தொடருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## சிறப்புற

கருணா, விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி, விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பானு, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம், விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு. சங்கர், வடமராட்சி சிறப்பு பொறுப்பாளர் திரு செல்வம் மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. செந்தாளன், விடுதலைப் புலிகள் உறுப்பினர் யோகரட்ணம் யோகி, வன்னி மாவட்ட அரசியல்துறைபொறுப்பாளர் திரு. மனோ, யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி யாழ். மாவட்ட நிதித் துறைப் பொறுப்பாளர் திரு. ரவி, மட்டு/அம்பாறை தளபதி திரு. மனோமாஸ்ரர், அரசியல் துறை நடுவகப் பணியகப் பொறுப்பாளர் திரு.பாப்பா, தென்மராட்சி கோட்ட பொறுப்பாளர் திரு. பரணி, யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர், கள மருத்துவப் பொறுப்பாளர் ஆகியோர் மாவீரருடைய உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்த பின்பு மாவீரருடைய பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (86)

## இன்று திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட அனுமதி பெற்ற இறைச்சிக் கடைகள் போயா தினமான இன்று திறக்கப்பட்டிருக்கும். எனினும் பூரணை தினமான நாளை இறைச்சிக்கடைகள் மூடப்படும் என யாழ். சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.


**நியூ யாழ் சைனீஸ்**

★ நூடில்ஸ்
★ கோழி புரியாணி
★ (F)பிறைட் றைஸ்

ஏனைய சைனீஸ் உணவு வகைகளுக்கும்

நியூ யாழ் சைனீஸ்
124,
முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். [5553]


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**பதவி வெற்றிடம்**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993-08-30ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

உதைபந்தாட்டம் / வளைகோல் பந்தாட்டம்/கூடைப் பந்தாட்டம்/மேசைவரிப்பந்தாட்டம்/உடற்பயிற்சி விளையாட்டுக்கள் / மல்யுத்தப்பயிற்சிகள்/சதுரங்க ஆட்டம்/கராட்டி / இரிக்கெட / வரிப்பந்தாட்டம் ஆகியன வற்றிற்கு இடைவரவுப் போதனாசிரியர்கள்.

கொடுப்பனவு விகிதம்:

மணித்தியாலத்திற்கு 75/- ரூபா

(மாதமொன்றுக்கு 900/- ரூபா உச்ச அளவுக்கு உட்பட)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் நிதிக்கிளையில் 20/- ரூபா

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**31-07-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; இல்லை.

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-2829, 26-3530, 26 5870, 41-6933, 28-9327
26-6026, 26-2668, 42-1059, 28-6546, 24-4265
26-6568, 24-5258, 27-7263, 26-4393, 26-4636

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9416, 26-6075, 28-8037, 43-4580, 42-0970


**நாளை வெளிவருகின்றது!**




- தளபதி கிட்டு நினைவுப் பாடல்கள்
- கரும்புலிகள் பாடல்கள்
- செஞ்சோலை பாடல்கள்
- கூவ குயிலே பாடல்கள்
- விழித்தெழுவோம் பாடல்கள்
- விடியலைத் தேடும் பறவைகள் பாடல்கள்

ஆகியன உள்ளடங்கியுள்ளன

நாளை எல்லா பத்திரிகை விற்பனை நிலையங்களிலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழீழ எழுச்சிப் பாடல்கள் – பாகம் 4

(5596) விலை 30 ரூபா


## வேலை வாய்ப்பு

யாழ். குடாநாட்டில் இயங்கும் தொழிற்சாலைக்கு கீழ்க்காணப்படும் தொழிலுக்கு அனுபவமுள்ள தொழிலாளர்கள் உடனடியாக தேவைப்படுகிறார்கள்.

[1] - இயந்திரம் பொருத்துனர் (MECH. FITTER)
[2] - மின் பொருத்துனர் (ELEC. FITTER)

### மன்னாரில் திடீர் மோதல்;

# மூன்று இராணுவத்தினர் பலி நான்கு புலிகள் வீரச்சாவு

மன்னார் மாவட்டம் கறிச்சட்டிப்பாலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே கடந்த வியாழனன்று இடம் பெற்றமோதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இராணுவ கட்டுப்பாட்டு பகுதியான மன்னார்தீவிற்கும் தள்ளாடி இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள கறிச்சட்டிப் பாலம் என்ற இடத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் இம் மோதல் ஏற்பட்டது. இம் மோதலில் நான்கு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். வீரச்சாவடைந்த மேஜர் றேமன் [வேலுச்சாமி மூர்த்தி, ஆண்டான் குளம், அடம்பன், மன்னார்], கப்டன்ஈழவன்/றேகன் [சந்தான் சிறில் மரியநாயகம், உயிர்த்தராசன் குளம், முருங்கன்] லெப்டினன்ட் தம்பன் [மதுரலிங்கம்உக்குலுகுமார், செம்மண்தீவு, முருங்கன்], வீரவேங்கை எழில்வேந்தன் [கந்தசாமி சதீஸ்குமார், ஏழாலை, யாழ்ப்பாணம் தற்போதைய முகவரி: மடு அகதிமுகாம்] ஆகிய நான்கு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

★ ரி-56-2 ரக துப்பாக்கி -02
★ அதற்குரிய மகசீன் -02
★ நடுத்தர ரவைகள் -15

என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.


மேஜர் றேமன்


கப்டன் ஈழவன்/றேகன்


லெப்டினன்ட் தம்பன்


வீரவேங்கை எழில்வேந்தன்

## முள்ளிக்குளம் பகுதியில் புக்காரா குண்டு வீச்சு

மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் கடற்கரைப் பகுதியில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரு புக்காரா விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் அப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இவ் இரு விமானங்களும் ஆறுக்கு மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளன.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## எஸ். சி. எவ்விடம் எவரும் வாகனம் கோரவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 27ஆம் திகதி கல்வியங்காட்டில் இடம்பெற்ற குண்டு வீச்சின் போது காயமடைந்தவர்களை ஏற்றிச்செல்வதற்கு தம்மிடம் எவரும்வாகனம் எதுவும்கோரவில்லை என்றும், குண்டுவீச்சு இடம்பெற்றதன் பின்னர் அலுவலகவாயிற்கதவுகளை தாம் பூட்டிவைக்கவில்லை என்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் விடுத்த செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் அச் செய்திக்குறிப்பில், பத்திரிகைச் செய்தி ஒன்று தமது நிறுவனம் குறித்து ஏற்படுத்தியிருக்க கூடிய தவறான கருத்துக்களை மேற்குறிப்பிட்ட தகவல் மக்கள் மத்தியில் நீக்கியிருக்கும் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளாலிச் சம்பவம்

## நான்கு படகோட்டிகள் வீடு திரும்பவில்லை

கிளாலி கடற்பரப்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற படகுப் பயணிகள் மீதான சிறிலங்காக் கடற்படையினரின் தாக்குதலின் போது கடலில் குதித்த நான்கு படகோட்டிகள் காணாமற் போயுள்ளனர்.

மண்டைதீவைச் சேர்ந்த படகோட்டிகளான சந்தியாப்பிள்ளை சவுந்தரநாதன் (27 வயது), செல்லத்தம்பி தோமஸ் யெனயஸ் (நேசன்) (வயது20), ஆரோக்கியநாதன் டல்வெஸ்ரர் (இன்பன்) (21 வயது) மற்றும் குருநகரைச்சேர்ந்த சிறில் டெனவ்ட் (25வயது) ஆகியோரே காணாமற் போனவராவர்.

மேற்படி படகோட்டிகளில் ஒருவரான யோசப்பு யேசுநாயகம் தருமதாஸ் (மண்டை தீவு) என்பவர் அன்றைய சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

மேற்படி காணாமற்போன படகோட்டிகளின் உறவினர்கள் அவர்களின் நிலையை அறிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடியுள்ளனர் [பா]

## நடிகமணி வைரமுத்து நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

நடிகமணி வி. வி. வைரமுத்துவின் நான்காவது நினைவு விழா இன்று ஞாயிறு பி. ப. 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழகம் கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. காங்கேசன்துறை வசந்தகான சபா எடுக்கும் இந்த விழாவிற்கு கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை தலைமை தாங்குவார்.

கலைமாமணி வே. மார்க்கண்டு, நாடகதிலகம் கே. வி. நற்குணம் ஆகிய இருவரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்.

## கூட்டம்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு தமிழீழக் கல்விக் கழக பண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

**பீலிக்ஸ் மேரி யோசேப்பின்**

⊛ விழுதெழுவோம் பாடல்கள்
⊛ விடியலைத் தேடும் பறவைகள் பாடல்கள்
ஆகியன உள்ளடங்கியுள்ளன

நாளை எல்லா பத்திரிகை விற்பனை நிலையங்களிலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழீழ எழுச்சிப் பாடல்கள் — பாகம் 4

(5596) விலை 30 ரூபா

# வேலை வாய்ப்பு

யாழ். குடாநாட்டில் இயங்கும் தொழிற்சாலைக்கு கீழ்க்காணப்படும் தொழிலுக்கு அனுபவமுள்ள தொழிலாளர்கள் உடனடியாக தேவைப்படுகிறார்கள்.

[1] - இயந்திரம் பொருத்துனர் (MECH. FITTER)
[2] - மின் பொருத்துனர் (ELEC. FITTER)
[3] - கம்மாலை (BLACK SMITH)
[4] - தகடு வேலை (TINKER)
[5] - மின் ஒட்டுனர் (ARC WELDER)
[6] - வார்ப்பு (FOUNDRY)
[7] - கடைச்சல் (LATHE)
[8] - அமுக்க இயந்திரம் (POWER P[illegible]S)
[9] - ஆணி நட்டு இயந்திரம் (BOLT PLANT)
[10] - மோட்டர் வயின்ட (MOTOR WINDER)
[11] - டை வேலை (TOOL ROOM WORK)

தொழில்நுட்பக் கல்லூரியில் பொருத்தமான பயிற்சி முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

8ஆம் திகதிக்கு முன் விண்ணப்பத்துடன் உடனடியாக கீழ்வரும் முகவரியில் வேலை நாட்களில் தொடர்புகொள்ளவும்

முகாமையாளர்
**இரும்பகம்**
ஸ்ரான்லி வீதி, (அருச்சுனா வீதி)
யாழ்ப்பாணம். (5595)

## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

(கரும்புலிகள் நினைவாக)
போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தயாரித்து வழங்கும்

## "தாயக கனவு"

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி6959

மன்னார் மாவட்டம் முள்ளிக்குளம் கடற்கரைப் பகுதியில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரு புக்காரா விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் அப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இவ் இரு விமானங்களும் ஆறுக்கு மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளன.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## எஸ். சி. எவ்விடம் எவரும் வாகனம் கோரவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 27ஆம் திகதி கல்வியங்காட்டில் இடம்பெற்ற குண்டுவீச்சின்போது காயமடைந்தவர்களை ஏற்றிச்செல்வதற்கு தம்மிடம் எவரும் வாகனம் எதுவும் கோரவில்லை என்றும், குண்டுவீச்சு இடம்பெற்றதன் பின்னர் அலுவலகவாயிற் கதவுகளை தாம் பூட்டிவைக்கவில்லை என்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் விடுத்த செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் அச் செய்திக்குறிப்பில், பத்திரிகைச் செய்தி ஒன்று தமது நிறுவனம் குறித்து ஏற்படுத்தியிருக்ககூடிய தவறான கருத்துக்களை மேற்குறிப்பிட்ட தகவல் மக்கள் மத்தியில் நீக்கியிருக்கும் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கான வெற்றிடம்

தமிழீழ நீதி மன்றங்களில் சேவையாற்றுவதற்கு தகுந்த தகைமைகளும், அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் சொந்த விபரங்கள், தகைமைகள் அடங்கிய விண்ணப்பத்தை 10-08-93 க்கு முன்னர் கீழ்க் குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல: 197
C/o ஈழநாதம்
81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(சி/7100)

## BECON - கல்வி நிறுவனம்
STANLEY ROAD, JAFFNA.

**-94 - A/L-**

தூய, பிரயோக கணிதம்
**திரு. கிருஷ்ணா**
செவ்வாய், வியாழன் — 04.00 — 06.00

**★ஆரம்பம் - 05.08.1993★**

வியாழன் — 04.00 மணி

(சி—7084)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 01-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கிளாலி கடற்பரப்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற படகுப் பயணிகள் மீதான சிறிலங்காக் கடற்படையினரின் தாக்குதலின் போது கடலில் குதித்த நான்கு படகோட்டிகள் காணாமற் போயுள்ளனர்.

மண்டைதீவைச் சேர்ந்த படகோட்டிகளான சந்தியாப்பிள்ளை சவுந்தரநாதன் (27 வயது), செல்லத்தம்பி தோமஸ் யெனயஸ் (நேசன்) (வயது20), ஆரோக்கியநாதன் டல்வெஸ்ரர் (இன்பன்) (21 வயது) மற்றும் குருநகரைச்சேர்ந்த சிறில் டெனவ்ட் (25வயது) ஆகியோரே காணாமற் போனவராவர்.

மேற்படி படகோட்டிகளில் ஒருவரான யோசப்பு யேசுநாயகம் தருமதாஸ் (மண்டை தீவு) என்பவர் அன்றைய சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

மேற்படி காணாமற்போன படகோட்டிகளின் உறவினர்கள் அவர்களின் நிலையை அறிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடியுள்ளனர் [பா]

## கூட்டம்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு தமிழீழக் கல்விக்கழக பண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## பீலீக்ஸ் மேரி யோசேப்பின்

மிருசுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட பீலீக்ஸ் மேரி யோசேப்பின் புத்தளத்தில் 30 7-93 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பீலீக்ஸ் அவர்களின் அன்பு மனைவியும், அன்ரன் (நொங்குவில் தோட்டம்) மேசி, லயனல் (புத்தளம்), கொட்பிறி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிர்மலா, பிறின்ஸ் (விவசாய திணைக்களம்), சூட்ஸ் (புத்தளம்), கில்டா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரோணி, ரீனா, அலன், ஸ்ரெபி, ஸ்ரீபன், டெஸ்மன்ற் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற இன்னாசிமுத்து, தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மகளுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
அன்ரன்
(மகன்)

(5593)

## சபாபதி வல்லிபுரநாதன்

(இளைப்பாறிய கட்டடத் திணைக்கள பொறியியல் பணிப்பாளர்)

சபாபதி வல்லிபுரநாதன் அவர்கள் 31-07-93 சனிக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் ஆவரங்கால் சபாபதி தம்பதிகளின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரபாகரனின் (டாக்டர்) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதிகளின் (ஆவரங்கால் அம்பாள் மோட்டர்ஸ்) பெறாமகனும், காலஞ்சென்ற அரசாங்க ஒப்பந்தகாரர் கணபதிப்பிள்ளை, திருமதி இரத்தினம் கணபதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், திரவியம் (சாவகச்சேரி), சரஸ்வதி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, சகுந்தலாதேவி, பரமநாதன் (கனடா), பராசக்தி, கனகாம்பிகை, பாலச்சந்திரன் (ஆவரங்கால்) ஆகியோரின் சகோதரனும், புவனேஸ்வரி, யோகேஸ்வரி (பிரான்ஸ்), யோகேந்திரன் (ஜேர்மனி), இராசேந்திரன் (நாதன் மருந்தகம், கல்வியங்காடு), புவனேந்திரன் (லண்டன்), விமலேஸ்வரி, அகிலேஸ்வரி, விமலேந்திரன் (யூனிவேர்சல் வீடியோ) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (1-8-93) கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இராசேந்திரன்

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

(5597)